# க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
# வணிகக் கல்வி I
நேரம் : 2 மணித்தியாலம்

01. தேவைகள் விருப்பங்களிடையே காணப்படும் வேறுபாட்டினை சரியாகக் காட்டும் கூற்றினைத் தெரிவு செய்க.
 1. தேவைகள் வரையறையற்றவையாக இருப்பதுடன் விருப்பங்கள் வரையறுக்கப்பட்டிருக்கும்.
 2. தேவைகள் பொதுவானவையாக இருப்பதுடன், விருப்பங்கள் பல்வேறுபட்டவையாகும்.
 3. தேவைகள் வணிகங்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. விருப்பங்கள் இயல்பாகவே உருவாகின்றன.
 4. தேவைகள் இரண்டாம் நிலைக்குட்பட்டவையாக இருப்பதுடன் விருப்பங்கள் முதல்நிலைக் குட்பட்டவையாகும்.
 5. தேவைகள் சமூகத் தாக்கங்களினால் மாற்றத்திற்குட்படுத்த முடியுமாயிருக்கும் அதேவேளை விருப்பங்கள் அவ்வாறு செய்ய முடியாது.

02. வணிக விழுமியங்களில் ஒன்று
 1. வணிகங்கள் நாட்டின் வேலை வாய்ப்புகளுக்கு பங்களிப்புச் செய்தல்.
 2. நுகர்வோரின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்துதல்.
 3. உரிமையாளருக்கு நியாயமான வருமானத்தை ஈட்டிக்கொடுத்தல்.
 4. ஊழியர்களின் தொழிற்பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்துதல்.
 5. ஏனைய வணிகங்களுடன் நியாயமாகவும் நேர்மையாகவும் போட்டியிடல்

03. பின்வருவனவற்றுள் ஒழுங்கு முறையால் வரிசைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.
 1. நேர் உற்பத்தி → பண்டமாற்று → வியாபாரம் → நேரில் உற்பத்தி → தனிநபர் சிறப்புத் தேர்ச்சி
 2. கைத்தொழிற்புரட்சி → நேர் உற்பத்தி → பண்டமாற்று → நேரில் உற்பத்தி → பணப்பரிமாற்றம்
 3. நேர் உற்பத்தி → நேரில் உற்பத்தி → தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி → பண்டமாற்று → தனிநபர் சிறப்புத் தேர்ச்சி
 4. பண்டமாற்று → நேர் உற்பத்தி → வியாபாரம் → கைத்தொழில் புரட்சி → பணப்பரிமாற்றம்
 5. நேர் உற்பத்தி → தனிநபர் சிறப்புத் தேர்ச்சி → நேரில் உற்பத்தி → பண்டமாற்று → வியாபாரம்

04. இரண்டாம் நிலை வணிககருமம் எனக் கருதப்பட முடியாதது
 1. நீர் வழங்கல்
 2. பெற்றோலிய உற்பத்தி
 3. மாற்றீட்டுக் கைத்தொழில்
 4. பாதுகாப்பு
 5. நிர்மாணக் கைத்தொழில்

05. வணிகத்தின் பேரண்டச் சூழலின் ஒரு விசையாக ஏற்றுக்கொள்ள முடியாத காரணி எது?
 1. மக்கட் சூழல்
 2. தொழில் நுட்பச் சூழல்
 3. போட்டிச் சூழல்
 4. பொருளாதாரச் சூழல்
 5. அரசியல் மற்றும் சட்டச்சூழல்

06. “தார்மீக வேண்டுகோள் விடுத்தல்” (Moral suasinon) என்ற கருவி பின்வருவனவற்றுள் எதனுடன் தொடர்புபடுகின்றது.
 1. முன் விபரணங்களை பிரசுரிக்கையில்
 2. காப்புறுதி நட்ட ஈட்டுக் கோரிக்கையில்
 3. நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்த
 4. வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பிக்கையில்
 5. சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கை

07. நாட்டின் வணிக வளர்ச்சிக்கு வட்டி வீதத்தை ஒற்றை எண்களுக்கு மாற்றுவதாக வரவு செலவுத் திட்ட உரையில் நிதி அமைச்சர் கூறினார். இங்கு அரசின் கொள்கை யாது?
 1. இறைக்கொள்கை
 2. பாதீட்டுக்கொள்கை
 3. வட்டிவீதக் கொள்கை
 4. நிதிக்கொள்கை
 5. மேற்கூறிய எவையுமன்று

08. சுகுணன் சுப்பர்மார்க்கட் ஒன்றில் பதப்படுத்திய பால்ப்பைக்கற் ஒன்றினை வாங்கினான். இவ்வுற்பத்தியின் காலாவதித் திகதி மாற்றப்பட்டுள்ளதை அறிந்து கொண்டான். இவ்வணிகத்தின் இம்முறைகேடான செயற்பாட்டின் மூலம் மீறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமை
1. தெரிவு செய்யும் உரிமை
2. செவிமடுக்கும் உரிமை
3. இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமை
4. தகவல்களை அறியக்கூடிய உரிமை
5. அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய உரிமை

09. வரையறுக்கப்பட்ட கம்பனிகள் சட்ட அந்தஸ்தினை (Legal personality) பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமாக அமைவது,
1. முன் விபரணத்தை வெளியீடு செய்கையில்
2. அகவிதியை தயார் செய்கையில்
3. உருவாக்கற் பத்திரத்தை பெற்றுக்கொள்கையில்
4. இழிவு மூலதனத்தைப் பெற்றுக்கொள்கையில்
5. பங்குச் சந்தையில் பட்டியலிடுகையில்

10. பங்குடமை ஒன்றின் உச்ச பங்காளர் எண்ணிக்கையினை வரையறுக்கும் சட்டம்
1. 1890ஆம் ஆண்டு பங்குடமைகள் கட்டளைச் சட்டம்
2. 1840ஆம் ஆண்டு மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்
3. 1918ஆம் ஆண்டின் வியாபார பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டம்
4. 1907ஆம் ஆண்டு வரையறுத்த பங்குடமைகள் கட்டளைச் சட்டம்
5. 2007ஆம் ஆண்டு கம்பனிகள் சட்டம்

11. கூட்டுறவுக் கொள்கையாக அமைய முடியாதது,
1. சுதந்திரமானதும் சுயேட்சையானதுமான அங்கத்துவம்
2. சனநாயக நிர்வாகம்
3. சமத்துவமும் ஒத்துழைப்பும்
4. இறைமையும் சுதந்திரமும்
5. சமூகம் தொடர்பான அக்கறை கொள்ளல்

12. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முயற்சியாண்மையினூடாகக் கிடைக்கும் பெறும் நன்மைகள்.
1. இடர்களை ஏற்றலும் இலாபத்தை உச்சப்படுத்தலும்
2. கடின உழைப்பும் வெற்றிகரமான முகாமைத்துவமும்
3. முழுமையான அர்ப்பணிப்பும் வணிக வாய்ப்புகளை இனம் காணலும்
4. தொழில் வாய்ப்புக்கள் உருவாதலும் வாழ்க்கைத்தரம் உயர்வடைதலும்
5. புதிய வியாபாரச் சந்தை அபிவிருத்தியும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தலும்

13. கீழே தரப்பட்டுள்ள அட்டவணைகளில் அட்டவணை A ஆனது இலங்கையின் நிதி நிறுவன வகைப்படுத்தல்களையும் அட்டவணை B அவற்றின் உள்ளடக்கங்களையும் எடுத்துக் காட்டுகிறது.

| | A | | B |
|---|---|---|---|
| A | வங்கித்துறை | 1 | பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் |
| B | வைப்புக்களை ஏற்கும் நிதி நிறுவனம் | 2 | காப்புறுதிக் கம்பனிகள் |
| C | விசேஷ நிதி நிறுவனங்கள் | 3 | உரிமம் பெற்ற வணிக வங்கி |
| D | ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் | 4 | குத்தகைக் கம்பனி |

அட்டவணை A யில் உள்ள நிதி நிதி நிறுவன வகைப்படுத்தலுக்கு பொருந்தக்கூடிய அட்டவணை Bயில் உள்ள உள்ளடக்கங்களைச் சரியாகக் கொண்ட இணைப்பு எது?

1. A – 1, B - 3, C - 4, D – 2,
2. A – 3, B - 1, C - 4, D – 2,
3. A – 2, B - 4, C - 3, D – 1,
4. A – 4, B - 1, C - 2, D – 3,
5. A – 3, B - 2, C - 1, D – 4,

14. பின்வருவனவற்றுள் சிறப்புமுறை குறுக்குக் கோடிடலாக ஏற்றுக்கொள்ளக்கூடியது
   1. காசோலையின் முகப்பில் இரு சமாந்தரக் கோடுகளுடன் “கைமாறத் தகாதது” என எழுதுதல்.
   2. சமாந்தரக் கோடுகளினுள் காசோலை முகப்பில் வங்கி ஒன்றின் பெயரை எழுதுதல்.
   3. சமாந்தரக் கோடுகளின்றி காசோலையின் முகப்பில் “கைமாறத் தகாதது” எனும் பதத்தை எழுதுதல்.
   4. காசோலையின் முகப்பில் இரு கோடுகளை மட்டும் இடல்.
   5. சமாந்தரக் கோடுகளினுள் பெறுவோன் கணக்கு மட்டும் என எழுதுதல்.

15. காசோலை ஒன்று மறுக்கப்படுவதற்குரிய காரணங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் காசோலையை மீண்டும் வங்கிக்கு சமர்ப்பிக்க முடியாத நிலையைக் குறிக்கும் விடை எது?
   1. நடைமுறைக் கணக்கில் போதிய நிலுவையின்மை
   2. பூர்த்தி செய்யப்படாத நிலைமை.
   3. புறக்குறிப்பிடல் இன்மை.
   4. காலம் கடந்த காசோலை.
   5. திகதி குறிப்பிடப்படாமை.

16. மிகப் பெரிய பெறுமதி வாய்ந்த கொடுக்கல் வாங்கல்களையும் அவசர கொடுக்கல் வாங்கல் களையும் ஆற்ற நேரடியாகக் கணக்குகளிற்கு பண மாற்றுதலுக்காக மத்திய வங்கி அறிமுகப் படுத்திய முறை?
   1. பதிவிடப்படாத ஆவண தீர்ப்புமுறை (SSSS)
   2. அதேநேர தீர்ப்பனவு முறைமை (RTGS)
   3. கொடுப்பனவு, பெறுவனவு முறைமை
   4. Swift முறை
   5. லங்கா கிளியர் முறைமை (Lanka clearing)

17. வங்கிக் கட்டிடமொன்றிற்கு பயங்கரவாதத் தாக்குதல் காரணமாகத் தீப்பிடித்தது. இதனால் வங்கியருகே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களும் தீயால் அழிவுற்றன. வாகனங்களுக்குத் தீயபாயக் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. ஆயினும் இழப்பீடு மறுக்கப்பட்டது. இது எவ்வடிப்படையில் ஆகும்?
   1. அண்மைக் காரணித் தத்துவம்
   2. பங்களிப்புத் தத்துவம்
   3. உயர் நம்பிக்கை
   4. காப்புறுத்தும் உரிமை
   5. பதிலாள் வைப்புத் தத்துவம்

18. இலங்கையின் பயணிகள் தெருப்போக்குவரத்துச் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபடக் கூடிய நிறுவனம் எது?
   1. இலங்கை மோட்டார் போக்குவரத்துச் சங்கம்
   2. இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்
   3. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
   4. தேசிய போக்குவரத்துச் சபை
   5. இலங்கை தனியார் போக்குவரத்து அமைச்சு

19. பொருள் ஒன்று வாடிக்கையாளருக்குத் தேவையான இடத்தில் கிடைக்கும்போது அப்பொருளின் பெறுமதி உயர்வடைகிறது. இவ்வாறு பொருளின் பெறுமதி உயர்வடைய காரணியாக அமைவது
   1. தொடர்பாடல்
   2. காப்புறுதி
   3. சர்வதேச வர்த்தகம்
   4. போக்குவரத்து
   5. சில்லறை வியாபாரம்

20. தொடர்பாடல் ஒன்று வினைத்திறனாகுவது,
   1. சரியான தகவலை வழங்கும்போது
   2. தொடர்பாடலின் நோக்கம் சென்றடையும்போது
   3. தகவல் சரியான நேரத்தில் சென்றடையும்போது
   4. தகவல் சரியான நேரத்தில் அனுப்பப்படும்போது
   5. சிறந்த பின்னூட்டல் ஒன்றைப் பெறும்போது

21. நிறுவனமொன்றின் இலக்குகளை அடைதல் எதன்மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது?
   1. திட்டமிடல்
   2. கட்டுப்படுத்தல்
   3. ஒழுங்கமைத்தல்
   4. நெறிப்படுத்தல்
   5. தீர்மானம் செய்தல்

22. பின்வரும் அட்டவணையில் A நிரலானது முகாமையாளர்களது பிரதான வகிபாகத்தையும் B நிரலானது செயற்பாடுகளையும் எடுத்துக் காட்டும்.

| | A | | B |
|---|---|---|---|
| X | ஆளிடைத் தொடர்பு வகிபாகம் | 1 | கண்காணிப்பாளர் |
| Y | தகவலறிப்பு வகிபாகம் | 2 | முயற்சியாளர் |
| Z | தீர்மானம் எடுத்தல் வகிபாகம் | 3 | மேலதிகாரி |
| | | 4 | உத்தியோகப் பேச்சாளர் |
| | | 5 | இணைப்பு அதிகாரி |
| | | 6 | இணக்கப் பேச்சாளர் |

A இற்கும் B இற்கும் பொருத்தமான இணைப்பு

1. X – 3, 5 Y – 1, 4 Z – 2,6
2. X – 3, 5 Y – 2, 4 Z – 1,6
3. X – 1,6 Y – 4, 5 Z – 2,3
4. X – 3, 5 Y – 1, 2 Z – 4,6
5. X – 1,2 Y – 3, 4 Z – 5,6

23. கீழுள்ள ஊழியர்கள், தமது மேற்பார்வையாளருக்கு தமது நடவடிக்கைகள் மற்றும் வெளியீடு கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் நியாயப்படுத்துவதை எடுத்துக் காட்டும் முகாமைத்துவம்

1. பொறுப்புடமை
2. வகை கூறல்
3. கட்டளையிடலில் ஓரினத்தன்மை
4. கட்டளைச் சங்கிலி
5. அதிகார கையளிப்பு

24. உற்பத்தியில் ஐந்து மட்டங்களைக் காண முடியும். வாடிக்கையாளரைக் கவர்ந்தெடுப்பதற்குத் தேவையான உற்பத்தி மட்டம்

1. எதிர்பார்ப்பு உற்பத்தி மட்டம்
2. அடிப்படை உற்பத்தி மட்டம்
3. மையநலன் உற்பத்தி மட்டம்
4. எதிர்கால உற்பத்தி மட்டம்
5. விருப்ப உற்பத்தி மட்டம்

25. உற்பத்திக் கலவையின் உபகரணத்தை மட்டும் உள்ளடக்கிய விடைத் தொகுதி

1. தரம் / முடிவுப் பொருள் / பண்பு / வடிவம் / பொதி
2. தரம் / விலை / கழிவு / வடிவம் / பண்பு / முடிவுப்பொருள்
3. முடிவுப்பொருள் / பண்பு / வடிவம் / விளம்பர சேவை
4. முடிவுப்பொருள் / பண்பு / வடிவம் / விலை / சேவை
5. வடிவம் / பொதி / சேவை / பொறுப்பு / விலை

26. நிறுவனமொன்றில் குறுங்கால நிதி உடன்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்குள்ள ஆற்றல்களை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் விகிதம் எது?

1. முதலீட்டின் விளைவு விகிதம்
2. கடன்பட்டோர் புரள்வு விகிதம்
3. இருப்பு புரள்வு விகிதம்
4. விரைவு விகிதம்
5. கடன் விகிதம்

27. பின்வருவனவற்றுள் உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பு முறைகளைக் குறித்துக் காட்டுவது எது?

1. பதவி உயர்வு, திறன் அட்டவணை
2. இடமாற்றம், வலையமைப்பின் மூலம்
3. விளம்பரத்தின் மூலம், தொழில்சார் முகவர் மூலம்
4. அரச வர்த்தமானி மூலம், பதவி உயர்வு மூலம்
5. மரபுரிமைத்திட்டம், விளம்பரங்கள் மூலம்

28. தரவு தயாரிப்புச் செயற்பாட்டின் பணிகளை சரியாகக் காட்டும் விடைத்தொகுதி

1. பகுப்பாய்வு, வகைப்படுத்தல், தெரிவு செய்தல், சுருக்கப்படுத்தல்
2. தெரிவு செய்தல், கணித்தல், பகுப்பாய்வு, சுருக்கப்படுத்தல்
3. வகைப்படுத்தல், தெரிவு செய்தல், கணித்தல், சுருக்கப்படுத்தல்
4. வகைப்படுத்தல், தெரிவு செய்தல், கணித்தல், பகுப்பாய்வு
5. பகுப்பாய்வு, வகைப்படுத்தல், கணித்தல், களஞ்சியப்படுத்தல்

29. பின்வருவனவற்றுள் எது ஒரு செயற்பாட்டு மட்டத் தகவல் முறைமையாகும்?
   1. முகாமைத் தகவல் முறைமை (MIS)
   2. தீர்மான ஆதார முறைமை (DSS)
   3. நிறைவேற்ற ஆதார முறைமை (ESS)
   4. அறிவுத் தொழிற்பாட்டு முறைமை (KWS)
   5. கொடுக்கல் வாங்கல் முறைவழியாக்க முறைமை (TPS)

30. வணிகத் திட்டம் ஒன்றினைத் தயாரிக்கும் பிரதான சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அச்சந்தர்ப்பங்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி
   1. வணிகமொன்றை நவீனமயப்படுத்தும்போது / நிதிக்கூற்று தயாரிக்கும்போது
   2. புதிய வணிகம் ஒன்றை தொடங்கும்போது / வணிகம் ஒன்றை விஸ்தரிக்கும்போது
   3. புதிய வணிகம் ஆரம்பிக்கும்போது / நிதிக்கூற்று தயாரிக்கும்போது
   4. வணிகம் ஒன்றை ஒன்றிணைக்கும்போது / சாதாரண பங்கு விநியோகிக்கும்போது
   5. வணிகம் ஒன்றைக் கொள்வனவு செய்யும்போது / ஊழியர்களைச் சேர்க்கும்போது

**31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.**

31. ஒரு குறித்த உற்பத்தி பொருள் ஒன்று சந்தைக்கு வழங்கப்படும்போது வெற்றியளிப்பது அது வாடிக்கையாளருக்கு (i) ……………………………… (ii) …………………………… என்பவற்றை ஏற்படுத்தும்போதாகும்.

32. வணிகம் ஒன்றின் உள்ளகச் சூழலினை ஆராய்வதன் மூலம் (i) …………………………… (ii) ………………………….. என்பவற்றையும் புறச்சூழலினை ஆய்வு செய்வதன் மூலம் (iii) …………………………….. (iv) ……………………….. என்பவற்றையும் அறிந்து கொள்ளலாம்.

33. ……………………………. வணிகத்தின் அபிவிருத்தியானது தொழில்நுட்பச் சூழலில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும்.

34. 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டப்படி வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளின் இரு பிரதான வகைகளுமாக …………………………….. உம் ……………………………. உம் கருதப்படும்.

35. …………………………………… காசோலை ஒன்று காவியினூடாக கட்டளையிட முடியும் என்றாலும் ………………………… காசோலை ஒன்று இன்னொருவருக்கு மாற்றப்படல் வேண்டும் எனில் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

36. "சுறதுற" கடன் திட்டத்திற்காக நிதியுதவியை ஏற்பாடு செய்யும் வங்கிகள் (i) ………………. (ii) ……………………… (iii) ………………………. என்பன ஆகும்.

37. ………………………………. பாதுகாப்பு ஒன்றாகவும் ஏனைய காப்புறுதிகள் காப்புறுதி என்றும் அழைக்கப்படும்.

38. நகருக்கு அண்மையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மிக விரைவாக பெற்றோலியத்தை கொண்டு செல்ல பயன்படுத்தக்கூடிய போக்குவரத்துமுறை ………………… ஆகும். இம்முறையை தெரிவு செய்வதற்கான காரணங்கள் (i) ……………………………… (ii) ………………………………

39. GSP + வரிச்சலுகையை நடைமுறைப்படுத்தும் அமைப்பு …………………………… ஆகும். இதற்காக அவ்வமைப்பு விதிக்கும் நான்கு நிபந்தனைகளும் (i) ………………………………. (ii) ……………………… (iii) ……………………… (iv) ………………………….. என்பன ஆகும்.

40. காலத்திற்கேற்ற வகையில் முடிவு செய்ய முடியாதபோதும் வேகமாக மாற்றமடைவதுமான விடயங்களின் கீழ் தீர்மானமெடுத்தலின்போது மத்தியமட்ட முகாமையாளருக்கு உதவக் கூடிய தகவல் முறைமை ……………………………………………… ஆகும்.

**41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

41. பிரதான வணிகத் தொழிற்பாடுகள் 4 இனைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

42. வெளியகச் சூழலினை பிரதானமாக இருபகுதிகளாகப் பிரிக்கலாம். அவை எவை?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

43. நுகர்வோர் பாதுகாப்பை உறுதிசெய்ய உருவாக்கப்பட்டுள்ள பிரதான நிறுவனம் எது?

…………………………………………………………………………………………………

44. இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கையின் கருவிகள் 3 தருக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

45. குத்தகை முறைகளின் வகைகளை குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

46. காசோலை ஒன்றின் காந்தமை அடையாள நிரலில் (MICR) வெளிப்படுத்தப்படும் எண்களுக்கான விடயத்தை ஒழுங்குமுறையாகத் தருக.

(i) ……………………………. (ii) ……………………… (iii) ………………………

(iv) ……………………………

47. கப்பல் காப்புறுதியில் செய்யப்படும் இரு பிரதான காப்புறுதிகளும் எவை?

(i) ……………………………………………….... (ii) …………………………………………

48. பங்குச் சந்தையில் கொடுப்பனவு தீர்ப்பனவுடன் தொடர்புடைய நிறுவனம்?

……………………………………………………

49. தந்திரோபாய மட்டத்தில் பயன்படுத்தப்படும் தகவல் முறைமை

……………………………………………………

50. வணிகத் திட்டம் ஒன்றில் காணப்படும் பிரதான விடயங்கள் 05 தருக.

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

The National e-learning Portal for The General Education

**வணிகக் கல்வி** **வினாத்தாள் I** **விடைகள்**

| | | |
|---|---|---|
| 1 - 2 | 11 - 3 | 21 - 2 |
| 2 - 5 | 12 - 4 | 22 - 1 |
| 3 - 5 | 13 - 2 | 23 - 2 |
| 4 - 4 | 14 - 2 | 24 - 1 |
| 5 - 3 | 15 - 4 | 25 - 1 |
| 6 - 5 | 16 - 2 | 26 - 4 |
| 7 - 4 | 17 - 1 | 27 - 1 |
| 8 - 4 | 18 - 3 | 28 - 3 |
| 9 - 3 | 19 - 4 | 29 - 5 |
| 10 - 5 | 20 - 2 | 30 - 2 |

31. (i) பெறுமதி (ii) திருப்தி
32. (i) பலம் (ii) பலவீனம் (iii) வாய்ப்பு (iv) அச்சுறுத்தல்
33. இலத்தினயில் e - commerce
34. (i) பட்டியல்படுத்தப்பட்ட (ii) பட்டியல்படுத்தப்படாத
35. (i) காவியின் (ii) கட்டளை
36. (i) இலங்கை வங்கி (ii) மக்கள் வங்கி
    (iii) ஹற்றன் நஷனல் வங்கி HNB
37. ஆயுளுறுதி
38. குழாய் வழி (i) பாதுகாப்பு (ii) விரைவு
39. ஐரோப்பிய ஒன்றியம் (EU)
    (i) மனித உரிமை (ii) தொழிலாளர் உரிமை
    (ii) சூழல் பாதுகாப்பு (iv) நல்லாட்சி
40. DSS – தீர்மான உதவி முறைமை
41. உற்பத்தி, மனித வளம், நிதி, சந்தைப்படுத்தல், முகாமைத்துவம்
42. அண்மிய சூழல், (வேலைச்சூழல்), பொதுச்சூழல்
43. நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை
44. வட்டிவீதம், ஒதுக்குவீதம், திறந்த சந்தை நடவடிக்கை, கழிவு வீதம், கடன் அளவை வரையறுத்தல்
45. நிதிக்குத்தகை, பேணும் குத்தகை
46. காசோலை இலக்கம், வங்கி இலக்கம், கிளை இலக்கம், நடைமுறைக் கணக்கு இலக்கம்
47. கப்பல் காப்புறுதி, கப்பல் சரக்குக் காப்புறுதி
48. மத்திய வைப்பக முறைமை (C.D.S)
49. நிறைவேற்று உதவி முறைமை (ESS)
50. நிறைவேற்றுச் சுருக்கம், வணிக விபரம், சந்தைப்படுத்தல் திட்டம், செயற்பாட்டுத் திட்டம், மனித வளத்திட்டம், நிதித்திட்டம்

The National e-learning Portal for The General Education